# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 307 | 4 Pages | 10.6.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 307 | 4 பக்கங்கள் | 10.6.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# பலவீனமான பா.ஜ.க.வை செயல்பட வைப்போம் திமுக எம்.பி.க்களுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 10

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி அனைத்து தொகுதிகளையும் கைப்பற்றியது. இந்த நிலையில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் நடைபெற்றது. எம்.பி.க்கள் கூட்டத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றியதாவது;

"நாற்பதுக்கு நாற்பது என்ற இந்த வெற்றி என்பது சாதாரணமான வெற்றி அல்ல. 2004ம் ஆண்டு, 20 ஆண்டுகளுக்கு முன் முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி நமக்குப் பெற்றுத் தந்த வெற்றி இது. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தோம். இந்த தேர்தலில் அந்த ஒன்றையும் சேர்த்து நாற்பதுக்கு நாற்பது வென்றுவிட்டோம். முழுமையான வெற்றியைப் பெறுவது என்பது சாதாரணமான சாதனை அல்ல, வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாகும்.

370 தொகுதிகளில் வெற்றி பெறுவோம், 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று சொல்லி 240க்கு இறங்கி விட்டது பாஜக. இந்தச் சூழலில் நாம் தமிழ்நாட்டுக்கான கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து வாதாட வேண்டும், போராட வேண்டும். பலவீனமான



பாஜக அரசை, நமது முழக்கங்களின் மூலம் செயல்பட வைக்க வேண்டும். ஒரு விதத்தில் பார்த்தால் பாஜகவுக்கு சரிக்குச் சமமாக இந்தியாக் கூட்டணி எம்.பி.க்கள் இருக்கப் போகிறோம். இந்த வாய்ப்பை ஆக்க பூர்வமான விவாதங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அனைத்து பகுதிக்கும் சென்று பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தாக வேண்டும். நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்களை முன்வைக்க வேண்டும். தி.மு.க.வின் கடந்தகால நிலைப்பாடுகளை உணர்ந்து தெரிந்து நாடாளுமன்றத்தில் நடக்க வேண்டும். மக்களை காக்கும் பணியை செய்து தி.மு.க.வுக்கும் தமிழக மக்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்."

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

# நாடாளுமன்ற வளாகத்தில் மாற்றம்.. கொந்தளித்த விசிக.. அவை சிலைகளல்ல.. கொள்கையின் குறியீடுகள் என கண்டனம்

சென்னை, ஜூன் 10

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இளநிலை மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கைக்காக நடத்தப்பட்ட நீட் நுழைவுத் தேர்வில் முறைகேடுகளும், ஆள் மாறாட்டமும் நடைபெற்றுள்ளது. அரியானாவில் ஒரு மையத்தில் தேர்வு எழுதிய ஏழு மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர். சிலருக்கு தேசிய தேர்வு முகமை கருணை மதிப்பெண்ணும் வழங்கியுள்ளது. இது நாடு முழுவதும் அதிர்ச்சி அலை



களை உருவாக்கியுள்ளது. தொடர்ந்து நீட் தேர்வின் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குரியதாக மாறி வருகிறது. எனவே நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து நேர்மையான, நடுநிலையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். தவறு செய்தோர் மீது சட்டரீதியாக கடும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரும் மாநிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும். நீட்டிலிருந்து விலக்கு பெற, தமிழ்நாடு அரசின் சட்ட மசோதாவிற்கு ஜனாதிபதியின் ஒப்புதலை ஒன்றிய அரசு பெற்றுத்தர வேண்டும். தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ இடங்களுக்கு நீட்டிலிருந்து விலக்கு அளிக்கத் தவறும் ஒன்றிய அரசின் மாநில விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு பாடத்திட்டத்தில் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிய பாடங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன கவர்னர் குற்றச்சாட்டு

கோவை, ஜூன் 10

கோவையில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் 'புதிய பாரதத்தில் கல்விச் சீர்த்திருத்தங்கள்' என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. இந்த கருத்தரங்கில் தமிழக கவர்னர் ஆர்.என். ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அப்போது பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு பாடத்திட்டத்தில் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிய பாடங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று குற்றம் சாட்டினார். மேலும் இது தொடர்பாக அவர் கூறியதாவது:



தமிழகத்தில் தேசிய அளவிலான சுதந்திர போராட்ட தலைவர்கள் பற்றிய பாடங்கள் இல்லை. தமிழ்நாடு பாடத்திட்டத்தில் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிய பாடங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் பற்றிய மிகைப்படுத்துதலும், திராவிட இயக்கங்கள் குறித்த பாடங்களும் தான் உள்ளன. நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் நீத்த ஆயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்கள், மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வருகிறது. கல்வி அமைப்பை சீர் செய்வதற்கு, மார்க்சிய சிந்தனை உட்பட பல சிந்தனைகள் தடையாக உள்ளன.

இந்தியா என்பது அந்நியர்கள் அடையாளப்படுத்திய வார்த்தை. இந்தியா என்பதும் பாரத் என்பதும் ஒன்றல்ல. ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு வரைநூற்றாண்டுகளாக பாரத் என்றே அழைக்கப்பட்டு வந்தது. பாரத் என்றால் ஒளி. பாரத் என்பதை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை புரிந்து கொள்ள முடியும். இந்தியா என்பது பாரத் என்பதை ஒத்த அர்த்தமல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

# எழும்பூர் அரசு மருத்துவமனையில் இலவச செயற்கை கருத்தரிப்பு மையம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்

சென்னை, ஜூன் 10

நாட்டிலேயே முதல்முறையாக சென்னை எழும்பூர் அரசு மருத்துவமனையில் ரூ.6.97கோடியில் இலவச செயற்கை கருத்தரிப்பு மையம் பிரசவ வளாகம் திறக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயேமுதல்முறையாக கட்டணமின்றி சிகிச்சை அளிக்கும் வகையிலான இந்த வளாகத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தார்.

பின்னர் பேசிய அமைச்சர் சுப்பிரமணியன் கூறியதாவது,



அதிநவீன மருத்துவ உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டு, இந்த கருத்தரித்தல் மையம்துவங்கப்பட்டு உள்ளது. மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைப்பதற்கு, அரசு பல்வேறுமுயற்சிகளை எடுத்து, வெற்றியும் கண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், ஒரு லட்சம் கர்ப்பிணியரில், பிரசவத்தில் இறப்பு விகிதம் 70க்கும் மேல் இருந்தது. படிப்படியாக குறைத்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன் 54; கடந்தாண்டு 52; இந்தாண்டு 45 ஆக குறைக்கப்பட்டு உள்ளது. இந்தியாவில் 25 முதல் 45 வயதுக்கு உட்பட்ட 3.9 சதவீத மகளிருக்கு கருத்தரிப்பின்மை பாதிப்பு இருப்பது உறுதியாகிஉள்ளது.இந்தசெயற்கை கருத்தரித்தல் மையம் நிச்சயம் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும்.என தெரிவித்தார்.

## ஆப்கானிஸ்தானில் 3.6 ரிக்டர் அளவில் மிதமான நிலநடுக்கம்

காபூல், ஜூன் 10

ஆப்கானிஸ்தானில் இன்று காலை 10.15 மணியளவில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவானது.

நிலநடுக்கத்தை உணர்ந்ததும் மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்தனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை.

ஆப்கானிஸ்தானில் அடிக்கடி நிலநடுக்கும் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 6.3 ரிக்டர் அளவில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தில் சுமார் 2,000 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

..........................................

## பெண்ணை விழுங்கிய 16 அடி மலைப்பாம்பு.. கிராம மக்கள் செய்த செயல் அதிர்ச்சி வீடியோ



இந்தோனேசியா, ஜூன் 10

இந்தோனேசியாவில் காணாமல் போன பெண் மலைப்பாம்பின் வயிற்றுக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தென் சுலானீஸ் மாகாணத்தில் உள்ள காலேம்பாங் கிராமத்தில் வசித்து வருபவர் கணவர் மற்றும் 4 குழந்தைகளுடன் 45 வயதான பரிதா வசித்து வந்தார்.

கடந்த 3 நாட்களுக்கு முன் பரிதா திடீரென காணாமல் போன நிலையில் அவரை கணவரும் கிராமத்தினரும் தீவிரமாகத் தேடி வந்தனர். நேற்று பரிதாவின் உடைகளைக் கிராமத்தின் அருகே அவரது கணவர் கண்டுபிடித்த நிலையில் தேடுதலைத் தீவிரப்படுத்திய கிராமத்தினர் 5 மீட்டர் நீளமுடைய 16 அடி பைத்தான் வகை மலைப்பாம்பை அப்பகுதியில் பார்த்துள்ளனர்.

சந்தேகமடைந்த அவர்கள் மலைப்பாம்பின் வயிற்றைக் கிழித்து பார்த்த பொழுது உள்ளே பரிதாவின் ஆடைகளுடன் உடல் முழுதாக ஜீரணிக்கப்படாமல் இருந்துள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் மிகவும் அரிதானது என்றாலும் சமீப காலங்களாக இந்தோனேசியாவில் இதுபோன்று மக்கள் மலைப்பாம்புகளால் முழுதாக விழுங்கப்படும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகிறது.

கடந்த வருடம் தினாகியா மாவட்டத்தில் விவசாயி ஒருவர் 8அடி பைத்தானால் விழுங்கப்பட்டார். 2018 இல் சுலானீஸ் மாகாணத்தில் 54 வயது பெண் ஒருவர் 7 ஆடி பைத்தானின் வயிற்றில் இருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

..........................................

## 389 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு



டொராண்டோ, ஜூன் 10

கனடாவின் டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பாரீசுக்கு 389 பயணிகள்,13 பணியாளர்களுடன் ஏர் கனடா விமானம் புறப்பட்டது.

விமானம் பறக்கத் தொடங்கிய சில வினாடிகளில் அதில் உள்ள என்ஜின் வெடித்துச் சிதறியது. என்ஜின் பகுதியில் தீ பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகள், விமானிக்கு தகவல் தெரிவித்து உடனே விமானத்தை தரை இறக்குமாறு அறிவுறுத்தினர். விமானிகள் உடனடியாக விமானத்தை பத்திரமாக திருப்பி விமான நிலையத்தில் தரையிறக்கினர். அங்கு தயாராக இருந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக்குழுவினர் என்ஜின் பகுதியில் ஏற்பட்ட தீயை அணைத்தனர். விமானிகள் சாமர்த்தியமாக செயல்பட்டு விமானத்தை உடனே தரை இறக்கியதால் பயணிகள் தப்பினர். இந்த சம்பவத்தில் யாரும் காயம் ஏற்படவில்லை. விமானத்தில் தீ பிடித்ததாக தகவல் தெரிந்ததும் பயணிகள் பதற்றம் அடைந்தனர். பின்னர் அசம்பாவிதம் ஏற்படாமல் விமானம் தரை இறக்கப்பட்டதால் நிம்மதி அடைந்தனர். விமானம் புறப்பட்டதும் அடிப்பகுதியில் தீப்பிடித்து எரியும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

..........................................

## இஸ்ரேல் வான்வழி தாக்குதலில் 210 பேர் பலி: பிணைக் கைதிகள் 4 பேர் மீட்பு

காசா, ஜூன் 10

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். மேலும் 250க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர் களை பிணைக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்றனர். இதையடுத்து காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் காசாவில் 36 ஆயி ரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட போர் நிறுத்தத் தின் போது 100க்கும் மேற்பட்ட பிணைக் கைதி களை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். இன்னும் அவர்களிடம் 120 பிணைக்கைதிகள் உள்ளனர். அவர்களை மீட்க இஸ்ரேல் ராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் ஹமாஸ் அமைப்பினரால் கடத்தி செல்லப்பட்ட பிணைக்கைதி களில் ஒரு பெண் உள்பட 4 பேரை இஸ்ரேல் ராணுவம் அதிரடியாக நேற்று மீட்டது. காசா முனையில் உள்ள நுசைரத் முகாமில் கடத்தி வைக்கப்பட்டிருந்த பிணைக் கைதிகளை இஸ்ரேல் சிறப்புப்படையினர் மீட்டனர். இந்த மீட்பு நடவடிக்கையின் போது இஸ்ரேலிய சிறப்புப்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். மீட்கப்பட்ட பிணைக்கைதிகள் நோவா அர்காமனி, மெயிர்ஜன், ஆண்ட்ரே, ஷால்மி சிவ் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இவர்கள் அனைவரும் இசை விழாவில் இருந்து கடத்தி செல்லப்பட்டவர்கள். அவர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். 4 பேரும் நல்ல உடல் நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பிணைக் கைதிகள் மீட்பு நடவடிக்கையின் போது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 210 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்து உள்ளனர். மத்திய காசாவில் உள்ள நுசிராத் அகதிகள் முகாமில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 210 பேர் பலியானார்கள். 400க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று ஹமாசின் அரசாங்க ஊடக அலுவலகம் தெரிவித்து உள்ளது.

# தகாத உறவு மூலம் தோழி பெற்ற குழந்தையை தனது குழந்தை என்று கூறி வளர்த்த பெண்... அடுத்து நடந்த சம்பவம்

கன்னியாகுமரி, ஜூன்10

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகேயுள்ள கல்லுக்கூட்டம் பகுதியைச் சேர்ந்தவர் ஹெஸ்பெலின். இவரது மனைவி கிரைசைனி. இவர்களுக்கு 4 வயதில் ஒரு மகன் உள்ளார். இந்த நிலையில், கடந்த சில நாட்களாக கிரைசைனியின் வீட்டில் பச்சிளம் குழந்தை இருப்பதை பார்த்த அக்கம் பக்கத்தினர், இதுகுறித்து கிரைசைனியிடம் கேட்டதற்கு, அவர் தான் பெற்ற குழந்தைதான் என்று கூறியுள்ளார். இதனால் சந்தேகமடைந்த ஊர்மக்கள் போலீசில் புகாரளித்தனர்.




இதையடுத்து போலீசார் மேற்கொண்ட விசாரணையில், தனது தோழி ஆண் நண்பர் ஒருவருடன் தகாத உறவில் இருந்து குழந்தை பெற்றெடுத்ததாகவும், அந்த குழந்தையை சில நாட்கள் வைத்திருக்கும்படி தன்னிடம் ஒப்படைத்ததாகவும் கிரைசைனி கூறியது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இதையடுத்து உடனடியாக குழந்தையை மீட்ட போலீசார், குழந்தை நல பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக, கிரைசைனியிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சவுக்கு சங்கர் மீது போலீசாருக்கு காழ்ப்புணர்ச்சி இல்லை: ஐகோர்ட்டில் போலீஸ் கமிஷனர் விளக்கம்

சென்னை, ஜூன் 10

பெண் போலீஸ்காரர்கள், போலீஸ் உயர் அதிகாரிகளை அவதூறாக பேசிய சவுக்கு சங்கரை, குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், சவுக்கு சங்கர் தாயார் கமலா ஆட்கொணர்வு வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை தள்ளுபடி செய்யக் கோரி சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் பதில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், கூறியிருப்பதாவது:



சவுக்கு சங்கரை தனிப்பட்ட முறையில் போலீஸ் அதிகாரிகள் பழிவாங்கும் விதமாக அவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைத்துள்ளதாக மனுதாரர் கூறுவதும் உண்மையில்லை. சவுக்கு சங்கருக்கு எதிராக போலீஸ் அதிகாரிகளுக்கு தனிப்பட்ட முறையில் எந்த ஒரு பகையோ, காழ்புணர்ச்சியோ இல்லை. அவர் மீதுள்ள வழக்குகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சவுக்கு சங்கரை தாக்க வேண்டும் என்ற எண்ணம் சிறை அதிகாரிகளுக்கும் கிடையாது. அவர் காயம் அடைந்த சம்பவத்துக்கும், சிறை அதிகாரிகளுக்கும் எந்த சம்மந்ததும் கிடையாது. பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுவதைத் தடுக்கதான் அவர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மின்வேலிகளில் யானைகள் சிக்கினால் மின்வாரியத்திற்கு அபராதம்: சென்னை ஐகோர்ட்டு

சென்னை, ஜூன் 10

வனப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின்வேலிகளில் சிக்கி காட்டு யானைகள் உயிரிழந்து வரும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பாக, சென்னை ஐகோர்ட்டின் வனவிலங்கு பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு அமர்வு முன்பு விசாரணை நடைபெற்றது. வழக்கு விசாரணையின் போது, யானைகள் உயிழப்பை தடுக்க உபகரணங்கள் கொள்முதல் செய்தும் டெண்டர் இறுதி செய்யப்படாதது ஏன்? என ஐகோர்ட்டு கேள்வியெழுப்பியது.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், விரைவில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டது. மின்வேலிகளில் சிக்கி யானைகள் உயிரிழப்பது தொடர்ந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், மின்சார வாரியத்துக்கு அதிக அபராதம் விதிக்க நேரிடுமெனவும் ஐகோர்ட்டு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சேரன் விரைவு ரெயிலில் பயணிகளை தாக்கிய துணை ராணுவ படையினர்

சென்னை, ஜூன் 10

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து கோவைக்கு நேற்று இரவு சேரன் விரைவு ரெயில் புறப்பட்டது. ரெயிலின் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் 20க்கும் மேற்பட்ட துணை ராணுவப்படையினர் ஏறியுள்ளனர்.

அவர்கள் ரெயிலில் இருந்தபடியே மது அருந்திவிட்டு போதையில் ரகளையில் ஈடுபாட்டு வந்துள்ளனர். ராணுவப்படை வீரர்களால் தூக்கம் இல்லாமல் அவதியடைந்து வந்த பயணிகள், அவர்களிடம் தெரிவித்தபோது அவர்கள் பயணிகளை மிரட்டியுள்ளனர். மேலும் எங்களையே கேள்வி கேட்கிறீர்களா எனக் கூறி ஆபாச வார்த்தைகளை பேசியதுடன், காலணிகளை கொண்டு பயணிகளை தாக்கியுள்ளனர். இதில் இரு பயணிகள் காயமடைந்தனர். மேலும், துப்பாக்கியை காட்டியும் அவர்கள் பயணிகளை மிரட்டியுள்ளனர்.



இதனால் கோபமடைந்த பயணிகள், ஜோலார்பேட்டை ரெயில் நிலையம் அருகே அபாய சங்கிலியை பிடித்து இழுத்து ரெயிலை நிறுத்தினர். தொடர்ந்து, ராணுவ படையினர் நடந்த விதம் குறித்து அங்கு வந்த ரெயில்வே பாதுகாப்பு படை போலீசாரிடம் பயணிகள் புகார் தெரிவித்தனர். அத்துடன், துணை ராணுவப் படை வீரர்களை ரெயிலில் இருந்து இறக்கி விடுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து ரகளையில் ஈடுபட்ட துணை ராணுவப் படை வீரர்களை ரெயில்வே போலீசார் ரெயிலில் இருந்து இறக்கிவிட்டனர். தொடர்ந்து ரெயில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# கூடலூர் அருகே மக்களை அச்சுறுத்திய சிறுத்தை கூண்டில் சிக்கியது



நீலகிரி, ஜூன் 10

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம் தேவர்சோலையை அடுத்த பொன்வயல் கிராமத்தில், கடந்த 4ம் தேதி சுனில் என்பவர் வீட்டின் அருகே சிறுத்தை ஒன்று பதுங்கி இருந்தது. இதைப் பார்த்த பொதுமக்கள் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, சிறுத்தை நடமாட்டம் உள்ள பொன்வயல், பாலம்வயல் உட்பட்ட பகுதிகளில், வன ஊழியர்கள் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்கள்கவசஉடையஅணிந்து தேடும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது அங்குள்ள தேயிலை, காபி தோட்டங்களில் சிறுத்தை நடமாட்டம் இருப்பது உறுதியானது. சிறுத்தையின் உடலில் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் அல்லது வயது முதிர்வு காரணமாக அது பதுங்கி இருக்கலாம் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து மனிதர்களை தாக்கும் முன்பாக, அந்த சிறுத்தையை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, கூண்டு வைத்து சிறுத்தையைப் பிடிக்க வனத்துறையினர் தீவிர நடவடிக்கை மேற்கொண்டனர். கூண்டில் சிக்காதபட்சத்தில் மயக்க ஊசி செலுத்தி பிடிக்கவும் முடிவு செய்தனர்.

இந்நிலையில் இன்று காலை தேவன் எஸ்டேட் 2 தேயிலைத் தோட்டத்தில் வைக்கப்பட்ட கூண்டில் சிறுத்தை சிக்கியது. சிறுத்தை சிக்கிய இடத்திற்கு சென்ற முதுமலை புலிகள் கால்நடை மருத்துவர் ராஜேஷ் தலைமையிலான குழுவினர், காயமடைந்த சிறுத்தையை தெப்பகாடு கொண்டு செல்ல முடிவு செய்துள்ளனர். அங்கு சிறுத்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பின் அதை வனப்பகுதியில் விடுவதா அல்லது தொடர்ந்து சிகிச்சை அளிப்பதாஎன்பதுகுறித்து முடிவு செய்ய உள்ளதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். சிறுத்தை கூண்டில் சிக்கியதை அடுத்து, அப்பகுதி மக்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

# குற்றால அருவிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு

தென்காசி, ஜூன் 10

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள குற்றால அருவிகளில் கடந்த 31ந்தேதி சீசன் தொடங்கியது. மழை இல்லாத காரணத்தால் கடந்த 10 நாட்களாக அருவிக்கு வரும் நீர்வரத்து குறைந்து காணப்பட்டது. எனினும், சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தந்து ஆரவாரத்துடன் குளித்து மகிழ்ந்தனர்.



இந்த நிலையில், மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்த மழை காரணமாக குற்றாலம் ஐந்தருவியில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனை தொடர்ந்து மெயின் அருவியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப்பெருக்கின் போது மண், குச்சிகள் அடித்துவரப்பட்டது.

அப்போது புதிதாக பொருத்தப்பட்ட பாதுகாப்பு அலாரம் ஒலித்ததை தொடர்ந்து சுற்றுலா பயணிகள் வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து, பாதுகாப்பு கருதி சுற்றுலாப்பயணிகளுக்கு குளிக்க தடை விதிக்கப்பட்டது.

# திமுக கூட்டணி 40 இடங்களில் வென்றும் பயனில்லை என கூறியவர்களுக்கு தமிழச்சி தங்கபாண்டியன் பதிலடி

சென்னை, ஜூன் 10

முன்னாள் புதுச்சேரி கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் இன்று காலையில் அவசரமாக டெல்லி புறப்பட்டு சென்றார். முன்னதாக விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழ்நாட்டில் பா.ஜ.க. அதிகமாக வாக்குகள் பெற்றிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இடங்கள் கிடைக்கவில்லை என்பதை எல்லா தொண்டர்களையும் போலவே கவலையாக பார்க்கிறேன். எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்பதை விட, எந்த பலனும் இல்லாமல் காங்கிரசுக்கும், தி.மு.க.விற்கும் அதிக இடம் கிடைத்திருக்கிறது என்பதுதான் கவலை என கூறியிருந்தார்.



இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தென்சென்னை தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழச்சி தங்கபாண்டியன் பதில் அளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"திமுக கூட்டணி 40 இடங்களில் வென்றும் பயனில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்...

அப்படியில்லை...

1. தங்களை எதுவும் செய்துவிட முடியாது என்றஇறுமாப்பில்இருந்த பா.ஜ.க. இப்பொழுது பிற மாநிலக் கட்சிகளை அரவணைத்துச் செல்ல வேண்டிய சூழலுக்கு வந்திருக்கிறது.

2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மோடி தலைக்கு மேல் தூக்கி வணங்கியிருக்கிறார்.

3. ஜனநாயகம் என்பது அதிகாரம் செலுத்துவதில்லை அடங்கி அரவணைத்துச் செல்வது என்பதை பத்தாண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க. உணரத் தொடங்கியிருக்கும்; தாங்கள் எதைச் செய்தாலும் கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலையிலிருந்து இறங்கி வந்திருக்கும்.

4. இனி பா.ஜ.க. அசைக்கவே முடியாத சக்தி என்று ஊடகங்களால் கட்டமைக்கப்பட்டு மக்களை நம்ப வைக்க நடந்த முயற்சிகள் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கிறது.

5. ஜனநாயகத்தில் மக்களே அதிகாரம்மிக்கவர்கள்; தனிமனிதர்களோ அல்லது ஒரு இயக்கமோ மக்களைவிட அதிகாரம் கொண்டது இல்லை என்பதை இந்தத் தலைமுறைக்கு 2024 தேர்தல் உணர்த்தியிருக்கிறது.

ஒருவேளை தமிழ்நாடு வேறு மாதிரி முடிவெடுத்திருந்தால் பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை கிடைத்திருக்கக் கூடும். மேலே சொன்னது எதுவுமே நடக்காமல் போயிருக்கலாம்...

தமிழ்நாடு ஜனநாயகத்தை காப்பாற்றியிருக்கிறது; மக்களே முக்கியம் என்பதைக் காட்டியிருக்கிறது... அதனால்தான் இதன் பெயர் 'நாட்டை வழிநடத்தும் நாற்பதுக்கு நாற்பது'."

இவ்வாறு அதில் பதிவிட்டுள்ளார்.

# தனது 2வது மனைவி மகனுடன் மாயமானது குறித்து புகார் கொடுக்க வந்த டிரைவர் அவளுக்கு நான் 3வது கணவர் என்று கூறியதால் அவரை விசாரித்த போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தலைசுற்றல்

சேலம், ஜூன் 10

நடிகர் வடிவேலு பட நகைச்சுவை காட்சி போன்று நடந்த இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

சேலம் அருகே கன்னங்குறிச்சி போலீஸ் நிலையத்திற்கு பேண்ட், சட்டை அணிந்த டிப்டாப் வாலிபர் ஒருவர் ஒருவித தயக்கத்துடன் வந்தார். அவரிடம் அங்கு பணியில் இருந்த போலீசார் விசாரித்த போது, தனது மனைவி மற்றும் 5 வயது மகன் மாயமாகி விட்டதாகவும் புகார் கொடுக்க வந்துள்ளதாகவும் கூறி உள்ளார்.

பின்னர் அவர் போலீஸ் நிலையத்தில் பணியில் இருந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடம் புகார் மனுவை அளித்துள்ளார். இந்த புகார் குறித்து அவர் விசாரித்த போது அவருக்கு தலைசுற்றலே வந்து விட்டது என்று கூறலாம்.

ஆம். நடிகர்கள் அர்ஜூன், வடிவேலு நடித்த மருதமலை திரைப்படத்தில் வரும் ஒரு நகைச்சுவை காட்சியை நினைவு கூரும் வகையில் அந்த டிப்டாப் நபர் புகார் கொடுக்க வந்தது தெரியவந்தது. அந்த பட நகைச்சுவை காட்சியில் போலீஸ் நிலையத்துக்கு தம்பதியாக வந்தவர்களிடம் ஏட்டுவான நடிகர் வடிவேலு விசாரிக்கும் போது, இவர் தான் என் முதல் கணவர், இவர் எனக்கு முறைப்படி தாலி கட்டிய கணவர் என்று அந்த பெண் பட்டியலிட்டு ஏட்டு வடிவேலுவை கிறுகிறுக்க வைப்பார்.

அதேபோல் தான் புகார் கொடுக்க வந்தவரிடம் விசாரித்த போது, அவர் டிரைவர் என்பதும், தனது 2வது மனைவியும், 5 வயது

மகனும் மாயமாகி விட்டதாக கூறி இருந்தார். இதில் என்ன 2வது திருமணம் தானே என்று யோசிக்க தொடங்கினால், காணாமல் போன பெண்ணுக்கு வந்த டிரைவர் 3வது கணவராம். இப்போது அந்த சப்இன்ஸ்பெக்டர் வடிவேலு பாணியில் சற்று தவித்து தான் போனார்.

இருப்பினும் அந்த டிரைவரின் புகார் குறித்து கன்னங்குறிச்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து காணாமல் போன பெண் மற்றும் அவரது மகனை தேடி வருகின்றனர். தனது 2வது மனைவியை காணவில்லை என அந்த பெண்ணின் 3வது கணவர் புகார் கொடுத்தது போலீசார் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்யக்கோரி மராட்டிய மாநில அரசு கோரிக்கை

மும்பை, ஜூன் 10

நீட் தோ்வு நாடு முழுவதும் கடந்த மாதம் 5ந்தேதி நடத்தப்பட்டது. இந்த தேர்வுக்கான முடிவுகள் யாரும் எதிர்பார்க்காத வகையில் கடந்த 4ம் தேதி வெளியிடப்பட்டது. அப்படி வெளியிடப்பட்ட முடிவுகளில் பல்வேறு குளறுபடிகள் இருப்பதாக எழுந்துள்ளது.

குறிப்பாக ஒரே பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற 6 மாணவர்கள் முழுமையான மதிப்பெண்கள் பெற்று இருப்பதும், சில மாணவர்களுக்கு நெகட்டிவ் மதிப்பெண்கள் இல்லாமல் முழுமையான மதிப்பெண்கள் வழங்கப்பட்டிருப்பதும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தேசிய தேர்வு முகமை உரிய விளக்கம் தராமல் இருப்பதும் அரசியல் ரீதியாக கடும் கண்டனங்களை எழுப்பியுள்ளது.

குறிப்பாக நீட் தேர்வுக்கு எதிராக தொடர்ந்து குரல் எழுப்பி வரும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து இதற்கு எதிர்வினை கடுமையாக எழுந்து

இந்த நிலையில், கடந்த 4ம் தேதி வெளியான நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி மத்திய அரசுக்கு மராட்டிய மாநில அரசு அதிகாரப்பூர்வமாக கடிதம் அனுப்பி உள்ளது. தற்போது மராட்டியத்தில் பா.ஜ.க. மற்றும் சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே) கூட்டணி அரசு ஆட்சி செய்து வருகிறது என்பது குறிப்படத்தக்கது.

பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணியில் அல்லாத அரசுகள் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், தற்போது கூட்டணி கட்சி ஆட்சியில் இருக்கும் மாநிலத்திலிருந்தும் எதிர்ப்பு கிளம்பி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நீட் தேர்வு முடிவுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் காரணமாக மகாராஷ்டிரா மாநில மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய அபாயம் இருப்பதாக அம்மாநில கல்வித்துறை மந்திரி ஹசன் முஷ்ரிப் தெரிவித்துள்ளார்.

# தங்கும் விடுதியில் கணவன்மனைவி விஷம் குடித்து தற்கொலை

திருச்செந்தூர், ஜூன் 10

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் முகில் வண்ணம் பிள்ளை தெருவை சேர்ந்தவர் பாக்கிய ஈஸ்வரன் (வயது 49). பஞ்சு ஏற்றுமதி செய்யும் தொழில் செய்து வந்தார். இவரது மனைவி வசந்தலட்சுமி (42). இவர்கள் கடந்த 6ந் தேதி திருச்செந்தூர் வடக்கு மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள தனியார் தங்கும் விடுதி ஒன்றில் அறை எடுத்து தங்கினர். நேற்று முன்தினம் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு மீண்டும் அறைக்கு வந்தனர்.

நேற்று காலை வெகு நேரம் ஆகியும் அறை கதவு திறக்கவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த விடுதி பணியாளர்கள் கதவை தட்டினார்கள். அப்போதும் கதவு திறக்கவில்லை. இதையடுத்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது பாக்கிய ஈஸ்வரன், வசந்தலட்சுமி ஆகியோர் விஷம்குடித்து தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

இதுகுறித்து உடனடியாக திருச்செந்தூர் தாலுகா போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். 2 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருச்செந்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்தினர்.

கடன் தொல்லை காரணமாக 2 பேரும் தற்கொலை செய்திருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள்.

எனினும் வேறு ஏதாவது காரணம் உள்ளதா? என்றும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். தங்கும் விடுதியில் கணவன்மனைவி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# 13 நாட்களில் 6 பேர் உயிரிழப்பு மருத்துவ குழுவினர் தொடர்ந்து கண்காணிப்பு



தாளவாடி, ஜூன் 10

ஈரோடு மாவட்டம் தாளவாடி தலமலை ஊராட்சிக்கு உட்பட்ட தடசலட்டி, இட்டரை மற்றும் மாவநத்தம் ஆகிய மலை கிராமத்தில் பழங்குடியின மக்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இவர்களின் தொழில் ஆடு, மாடு மேய்ப்பது, கூலி தொழில் செய்து வருகின்றனர். கடந்த சில வாரங்களாக இங்கு மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் கடந்த மாதம் 24ந் தேதி மாவநத்தம் கிராமத்தில் மாரம்மா (40), தடசலட்டி கிராமத்தில் கடந்த கவுரியம்மாள் (65), ரங்கன் (75), மாதி (85) என 4 பேர் வாந்தி பேதியால் திடீரென உயிரிழந்தனர். அதேபோல் கடந்த 5ந் தேதி மாரே (67) என்பவரும், இட்டரை கிராமத்தில் கேலன் (60) என்பவர் உட்பட மொத்தம் 6 நபர்கள் கடந்த வாரங்களில் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து வயதானவர் உயிரிழந்தது மலைகிராம மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. அதை தொடர்ந்து நேற்று கிராமங்களில் மருத்துவக் குழுவினர், உணவு பாதுகாப்புத் துறை, வருவாய்த் துறை மற்றும் போலீசார் ஆகியோர் வீடு வீடாக சென்று அங்குள்ள மக்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்தனர்.

மேலும் பஞ்சாயத்து மூலம் குளோரின் பவுடர்கள் போடப்பட்டுள்ளது. மேல்நிலைத் தண்ணீர் தொட்டிகளில் உள்ள குடிநீரை பயன்படுத்துவதன் மூலமும், குட்டை நீரை குடிநீராக குடித்ததாலும், மேலும் தொடர்ந்து பெய்து வந்த மழையின் காரணமாக மழைநீர் தேங்கியுள்ளதாலும் இங்குள்ள வயதானவர்களுக்கு தொற்று ஏற்பட்டு வாந்தி பேதி ஏற்பட்டு மேற்கண்ட நபர்கள் இறந்திருக்கலாம் எனவிசாரணையில் தெரியவந்துள்ளது.

தடசலட்டி கிராமத்தை சேர்ந்த நீலி மற்றும் அவரது கணவர் பாலன் ஆகியோர் உடல்நிலை சரியில்லாததால்108ஆம்புலன்ஸ் மூலம் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேபோல் இட்டரை கிராமத்தை சேர்ந்த காமாட்சி என்பவர் சத்தியமங்கலம் தனியார் மருத்துவமனையிலும், லட்சுமி என்பவர் கர்நாடகா மாநிலம் சாம்ராஜ் நகர் அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மாவநத்தம், இட்டரை, தடசலட்டி ஆகிய 3 கிராமங்களும் அடர்ந்த வனப்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு செல்போன் தொடர் சேவை கூட இல்லை. உடல் நலம் பாதிக்கப்பட்டால் மற்றவர்களை தொடர்பு கொள்ளாமல் அவதிபட்டு வருகின்றனர். இந்த மலைகிராமத்தில் மருத்துவ குழு கிராமத்தில் தொடர்ந்து முகாமிட்டு பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் எனவும், 108 ஆம்புலன்ஸ் அந்த கிராமத்தில் நிறுத்தி வைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# குரங்கணி அருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை



மேலசொக்கநாதபுரம், ஜூன் 10

தேனி மாவட்டம் போடி அருகே சுமார் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது குரங்கணி மலை கிராமம். மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள இந்த கிராமம் அறிவிக்கப்படாத சுற்றுலாத்தலமாக திகழ்ந்து வருகிறது.

இங்குள்ள குரங்கணி நீரோடை, கொட்டகுடி ஆறுகளில் இருந்து வரும் நீர் மூலம் போடி மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடை விடுமுறை காரணமாக குரங்கணி அருவி நீரோடை பகுதிகளில் குளிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.


இந்நிலையில் தேனி மாவட்டம் உட்பட தமிழகத்தில் 15 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் குரங்கணி அருவி, நீரோடைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சுற்றுலா பயணிகள் உள்ளே செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டு வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்பகுதிக்கு செல்லும் சுற்றுலா பயணிகளை திருப்பி அனுப்புகின்றனர். கனமழை எச்சரிக்கை காரணமாக எந்த நேரமும் அருவி நீரோடையில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என்று நிலையில் சுற்றுலாபயணிகள் அருவி நீரோடை இறங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பள்ளி விடுமுறை நாட்கள் முடிந்து வருகின்ற 10ஆம் தேதி பள்ளிக்கூடங்கள் திறப்பதன் காரணமாகவும் சுற்றுலா பயணிகள் வரத்து குறைந்ததால் குரங்கணி மலை கிராமம் வெறிச்சோடி காணப்படுகிறது.

# மலைப்பகுதியில் சாரல் மழை: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77 அடியை எட்டியது



நெல்லை, ஜூன் 10

நெல்லை, தென்காசி மாவட்டங்களில்சிலஇடங்களில் மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டங்களில் விவசாய பணிகள் வேகமெடுத்துள்ளன.

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் மிதமான மழை பெய்து வருகிறது.

குறிப்பாக பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணை பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்தது. இன்று காலை நிலவரப்படி பாபநாசம் அணை பகுதியில் 4 மில்லிமீட்டரும், சேர்வலாறில் ஒரு மில்லிமீட்டரும் மழை பெய்தது. மழையால் இந்த அணைகளுக்குநீர்வரத்து வினாடிக்கு 850 கனஅடியாக இருந்து வருகிறது.

அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 404.75 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77.10 அடியை எட்டியுள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 91.14 அடியாக உள்ளது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 82.08 அடியாக உள்ளது. அங்கு இன்று காலை நிலவரப்படி 3.2 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலையில் மாஞ்சோலை மற்றும் அதனை சுற்றிலும் உள்ள தேயிலை எஸ்டேட்டுகளில் நேற்று கனமழை பெய்தது. நாலுமுக்கு எஸ்டேட்டில் இன்று காலை வரை 62 மில்லிமீட்டரும், ஊத்து பகுதியில் 41 மில்லிமீட்டரும், காக்காச்சியில் 28 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. மாஞ்சோலையில் 7 மில்லிமீட்டர்மழைபெய்துள்ளது.

மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

அம்பையில் லேசான சாரல் மழை பெய்து வருகிறது. ராதாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் 7 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

தென்காசி மாவட்டத்தில் இன்று காலை முதலே வானில் கருமேக கூட்டங்கள் திரண்டு காணப்படுகிறது. லேசான சாரல் மழை பெய்து வருகிறது. குளிர்ந்த காற்று வீசி வருவதால் இதமான சூழ்நிலை நிலவி வருகிறது.

தென்காசியில் ஒரு மில்லிமீட்டரும், குண்டாறு அணை பகுதியில் 2 மில்லிமீட்டரும், அடவிநயினார் அணை பகுதியில் 3 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் இதமான சீதோஷண நிலை நிலவி வருவதால் குற்றாலத்திற்கு சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதி வருகிறது.

# வட மாநிலங்களுக்கு செல்லும் 36 ரெயில்கள் ரத்து

சென்னை, ஜூன் 10

செகந்திராபாத் ரெயில்வே கோட்டத்துக்குட்பட்ட பகுதியில் 3வது ரெயில் பாதை அமைக்கும் பணி காரணமாக அந்த வழியாக செல்லும் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதில் தெற்கு ரெயில்வேக்குட்பட்ட தமிழ்நாடு, கேரளம் மற்றும் கா்நாடக மாநிலத்தில் இருந்து வட மாநிலங்களுக்கு செல்லும் 36 ரெயில்களின் சேவை முற்றிலும் ரத்து செய்யப்பட்டுள்ளது. ரத்து செய்யப்பட்ட ரெயில்கள் விவரம்:

சென்னை சென்ட்ரல் ஜெய்ப்பூா் இடையே வாரம் இரு முறை இயக்கப்படும் விரைவு ரெயில் (எண் 12697/12698) ஜூன் 21 முதல் ஜூலை 7 வரை முற்றிலும் ரத்து செய்யப்படும். மைசூரில் இருந்து தா்பங்காவுக்கு ஜோலாா்பேட்டை, காட்பாடி, அரக்கோணம் வழியாக செல்லும் பாக்மதி விரைவு ரெயில் ஜூன் 25, ஜூலை 2 தேதிகளிலும், மறுமாா்க்கமாக ஜூன் 28, ஜூலை 5ந்தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

திருநெல்வேலி பிலாஸ்பூா் இடையே இயக்கப்படும் வாராந்திர விரைவு ரெயில் ஜூன் 23, 30 தேதிகளிலும், மறுமாா்க்கமாக ஜூன் 25, ஜூலை 2 தேதிகளிலும் ரத்து செய்யப்படும். மன்னாா்குடியில் இருந்து பகத் கி கோதி செல்லும் விரைவு ரெயில் ஜூன் 24, ஜூலை 1ந் தேதிகளிலும், மறுமாா்க்கமாக ஜூன் 27, ஜூலை 4ந்தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

மதுரைபிகானோ்(ராஜஸ்தான்) இடையே இயக்கப்படும் அனுவ்ரத் விரைவு ரெயில் ஜூன் 20, 27, ஜூலை 4ந்தேதிகளிலும், மறுமாா்க்கமாக ஜூன் 23, 30, ஜூலை 7ந்தேதிகளிலும் ரத்து செய்யப்படும். ஜபல்பூா்மதுரை இடையே இயக்கப்படும் விரைவு ரெயில் ஜூன் 20, 27, ஜூலை 4 ஆகிய தேதிகளிலும், மறுமாா்க்கமாகஜூன் 22, 29, ஜூலை 6 தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

அதேபோல், கேரளத்தின் கொச்சுவேலி, எா்ணாகுளம் மற்றும் கா்நாடகத்தின் பெங்களூா், யஷ்வந்த்பூரில் இருந்து பாட்னா, பாடலிபுத்திரம், பிலாஸ்பூா், இந்தூா், கோா்பா, தானாப்பூா், டெல்லி உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும் வாராந்திர விரைவு ரெயில்கள் ஜூன் 20 முதல் ஜூலை 8 வரை ரத்து செய்யப்படும்.

புதுடெல்லியில் இருந்து சென்னை சென்ட்ரல் வரும் ராஜ்தானி அதிவிரைவு ரெயில் ஜூலை 3, 5 தேதிகளில் பாலா்ஷா வழியாக வருவதற்குபதிலாகவாராங்கல், நிஜாமாபாத், பிம்பல், மஜ்ரி வழியாக இயக்கப்படும். சென்னை சென்ட்ரலில் இருந்து புதுடெல்லி செல்லும் தமிழ்நாடு விரைவு ரெயில் ஜூலை 2, 3, 4ந்தேதிகளில் பாலா்ஷா வழியாக செல்வதற்கு பதிலாக வாராங்கல், பேடப்பள்ளி, நிஜாமாபாத், பிம்பல், மஜ்ரி வழியாக இயக்கப்படும் என தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

# குட்டி யானையை தாயுடன் சேர்க்கும் வனத்துறையினரின் முயற்சி தோல்வி

கோவை, ஜூன் 10

கோவையை அடுத்த மருதமலை வனப்பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல் நலம் பாதிக்கப்பட்ட பெண் காட்டுயானை எழுந்து நடக்க முடியாமல் படுத்து கிடந்தது. அதன் அருகில் ஆண் குட்டி யானை சுற்றி வந்தது. இதை அறிந்து சென்ற வனத்துறையினர் அந்த பெண் யானைக்கு தொடர்ந்து சிகிச்சை அளித்து உடல் நலம் தேறியதும் வனப்பகுதிக்குள் அனுப்பி வைத்தனர்.

ஆனால் தாயுடன் சேராமல் குட்டியானை பிரிந்து வந்தது. அந்த குட்டியானையை தாயுடன் சேர்க்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையில் அட்டுக்கல் வனப்பகுதியில் தாய் யானையுடன் குட்டியை சேர்க்க வனத்துறையினர் முயன்றபோது, குட்டியை நிராகரித்து தாய் யானை விலகி சென்றது. இதனால் தாயுடன் குட்டியை சேர்க்கும்பணி தோல்விஅடைந்தது.

இதையடுத்து குட்டி யானையை வாகனம் மூலம் மருதமலை யானை மடுவு வனப்பகுதிக்கு வனத்துறையினர் கொண்டு சென்றனர். அங்கு வேறு காட்டு யானைகள் கூட்டத்துடன் அதனை சேர்க்க முயன்றனர். ஆனால் அந்த யானைகள், குட்டியை தங்களுடன் சேர்க்காமல் விரட்டி விட்டன.

இதனால் குட்டி யானையை மருதமலை வனத்துறையினர் குடியிருப்பு பகுதிக்கு கொண்டு சென்றனர்.

அது வனத்துறையினரிடமும், பொதுமக்களிடமும் நன்றாக பழகி விட்டது. மனிதர்களுடன் பழகி விட்டதால்தான் குட்டியை ஏற்க காட்டு யானைகள் மறுப்பதாக கூறப்படுகிறது.

# சிறப்பு குறுவைத் தொகுப்புத் திட்டத்தை அறிவித்து விவசாயிகளையும், விவசாயத்தையும் பாதுகாக்க வேண்டும்: டி.டி.வி.தினகரன் அறிக்கை



சென்னை, ஜூன் 10

அ.ம.மு.க பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

ஜூன்12ம்தேதி மேட்டூர் அணையை திறக்க முடியாத சூழலால் கேள்விக்குறியாகியிருக்கும் டெல்டா பகுதி குறுவை சாகுபடி. சிறப்பு குறுவைத் தொகுப்புத் திட்டத்தை உடனடியாக அறிவித்து விவசாயிகளையும், விவசாயத்தையும் தமிழக அரசு பாதுகாக்க வேண்டும்.

காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் ஒட்டு மொத்த பாசன ஆதாரமாக திகழும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 44 அடியாக சரிந்திருக்கும் நிலையில், நடப்பாண்டில் டெல்டா பகுதிகளில் மேற்கொள்ளப்படும் குறுவை சாகுபடிக்காக ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர்திறக்க வாய்ப்பில்லாத சூழல் நிலவுவதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

காவிரி டெல்டா பாசன பகுதிகளில் கடந்த ஆண்டும் நிலவிய தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டிலும் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்படாது என்ற செய்தி டெல்டா பகுதி விவசாயிகளின் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது.

இயற்கை பேரிடர்கள், பொய்த்துப்போன பருவமழை, அதள பாதாளத்திற்கு சென்ற நிலத்தடி நீர் என சவால்கள் நிறைந்த சூழலிலும் விவசாயத்தை கைவிடாத விவசாயிகளுக்கு, விதை நெல், உரங்கள், இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் ஆகியவற்றை மானியத்தில் வழங்கும் வகையில் சிறப்பு குறுவைத் தொகுப்பு திட்டத்தை அறிவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டியது மிக அவசியமானதாகும்.

உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவின் படி கர்நாடக அரசு வழங்க வேண்டிய காவிரி நீரை உரிய நேரத்தில் பெறாமல், தமிழக விவசாயிகளுக்கு துரோகம் இழைத்திருக்கும் தி.மு.க அரசு, மேட்டூர் அணையின்நீரைமட்டுமே முழுமையாக நம்பியிருக்கும் டெல்டா பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் இதுவரை எந்தவித மாற்று ஏற்பாடுகளையும் செய்யாமல் அலட்சியம் காட்டுவது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, ஊருக்கே உணவளிக்கும் உழவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தடையில்லா மும்முனை மின்சாரத்துடன்கூடிய சிறப்பு குறுவைத் தொகுப்புத்திட்டத்தை உடனடியாக அறிவிப்பதோடு, கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களின் மூலம் கர்நாடக அரசுக்கு அழுத்தம் கொடுத்து தமிழகத்திற்கான காவிரி நீரை உரிய நேரத்தில் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ளத்தொடர்பு விவகாரத்தில் ஆட்டோ டிரைவரை தாக்கிய சம்பவம்: போலீஸ் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர், பெண் ஏட்டு பணியிடை நீக்கம்

திருச்சி, ஜூன் 10

ஸ்ரீரங்கம் போலீஸ் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் பணியாற்றி வந்த சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும், போக்குவரத்து பிரிவில் பணியாற்றி வந்த பெண் போலீஸ் ஏட்டு ஒருவருக்கும் சில வருடங்களாக கள்ளத்தொடர்பு இருந்து வந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெண் போலீஸ் ஏட்டுக்கு, ஒரு ஆட்டோ டிரைவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக சிறப்பு சப் இன்ஸ்பெக்டருடன் அவர் பழகுவதையும், பேசுவதையும் நிறுத்திக்கொண்டார். இதனால் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் கோபத்தில் இருந்தார். இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆட்டோ டிரைவருடன் பெண் போலீஸ் ஏட்டு உல்லாசமாக இருந்த சம்பவம் அவருக்கு தெரியவந்தது. உடனே அவர் ஆட்டோ டிரைவரை தேடினார்.

அப்போது, சேலம் ரோட்டில் ஆட்டோ டிரைவர் செல்வதாக தகவல் கிடைக்கவே,

அவர், தனது நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு, சிறுகாம்பூர் அருகே ஆட்டோ டிரைவரை மறித்து தாக்கிவிட்டு சென்றுவிட்டார்.

இதில் படுகாயம் அடைந்த ஆட்டோ டிரைவரை அந்த வழியாக வந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

மேலும் ஆட்டோ டிரைவர் கொடுத்த புகாரின்பேரில் வாத்தலை போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுபற்றி அறிந்த திருச்சி மாநகர போலீஸ் கமிஷனர் காமினி, சம்பந்தப்பட்ட போலீஸ் சிறப்பு சப்இன்ஸ்பெக்டரையும், ஏட்டையும் ஆயுதப்படைக்கு மாற்றினார். இந்தநிலையில், சிறப்பு சப்இன்ஸ்பெக்டரையும், பெண் போலீஸ் ஏட்டையும் பணியிடை நீக்கம் செய்து போலீஸ் கமிஷனர் உத்தரவிட்டார்.

# கள்ளக்காதல் விவகாரம்: மாமியாரை கத்தியால் குத்திகொலை செய்த வாலிபர்

பொன்னேரி, ஜூன் 10

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி வேண்பாக்கம் அடுத்த பள்ளம் பகுதியை சேர்ந்தவர் லதா (வயது 40). இவரது மகள் சவுமியா (22). இவருக்கும், கும்மிடிப்பூண்டி அடுத்த ஆரம்பாக்கம் பிள்ளையார்கோவில் தெருவை சேர்ந்த விவேக் (32) என்பவருக்கும் 3 ஆண்டுகளுக்கு முன்புதிருமணம்முடிந்தது.

குடும்ப தகராறு காரணமாக சவுமியா கணவர் விவேக்கை பிரிந்து கடந்த ஒரு வருடமாக தாயுடன் வசித்து வருகிறார். இதற்கிடையே சவுமியாவுக்கு வேறு ஒருவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டதாக தெரிகிறது. இந்த விவகாரம் தாய் லதாவுக்கு தெரிந்தும் அவர் கண்டுகொள்ளவில்லை. இந்நிலையில் சவுமியா வேறு ஊருக்கு வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு அந்த நபருடன் சென்றதாக கூறப்படுகிறது.

இதை அறிந்த விவேக் நேற்று இரவு மாமியார் லதா வீட்டுக்கு வந்து அவரிடம் தகராறில் ஈடுபட்டார். வாக்குவாதம் முற்றிய நிலையில் விவேக் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மாமியார் லதாவின் கழுத்தில் குத்தினார். ரத்த வெள்ளதில் லதா மயங்கி விழுந்தார். உடனே அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு பொன்னேரி அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் வரும்வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

தகவல் அறிந்த பொன்னேரி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று லதாவின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் மாமியாரை கொலை செய்த விவேக்கை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் பொன்னேரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காவிரி ஆற்றை தூய்மைப்படுத்தும் திட்டம்: தாமதமின்றி தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூன் 10

தமிழ்நாட்டில் காவிரி ஆற்றை தூய்மைப்படுத்துவதற்கான "நடந்தாய் வாழி காவிரி" திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய நீர் வள ஆணையம் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போடப்பட்டிருந்த காவிரியை தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய நீர்வள ஆணையம் ஒப்புதல் அளித்திருப்பது வரவேற்கத்தக்கது.

பெங்களூரு நகரிலும், அதையொட்டிய பகுதிகளிலும் உள்ள வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து ஒவ்வொரு நாளும் 150 கோடி லிட்டர் கழிவுகள் காவிரியில் கலக்கவிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் தொழிற்சாலை கள், சாயப்பட்டறைகள் போன்றவற்றில் இருந்து காவிரியில் பெருமளவில் கழிவுகள் கலக்கவிடப்படுகின்றன. மேட்டூர் கெம்பிளாஸ்ட் ஆலையிலிரு ந்து மட்டும் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய கார்சினோஜென், நோய் எதிர்ப்பு சக்தியை அழிக்கும் டையாக்சின் உள்ளிட்ட 28 வகையான நச்சுப்பொருட்கள் காவிரியில் கலக்க விடப்படுகின்றன. பொதுமக்கள் புனித நீராடும் கும்பகோணத்தில் மட்டும் 52 வகை நச்சுப்பொருட்கள் இருப்பதாக ஆய்வில் தெரியவந்திருக்கிறது. இந்த அளவுக்கு பாழ்பட்டு போன காவிரியை தூய்மைப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

காவிரியைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி 'காவிரியைக் காப்போம்' என்ற தலைப்பில் கடந்த, 2017ம் ஆண்டு ஒகேனக்கல் முதல் பூம்புகார் வரை விழிப்புணர்வு பரப்புரை பயணம் மேற்கொண்டேன். புனித நதியாக போற்றப்படும் காவிரி, நச்சு நதியாக மாறி வருவதை நாம் தொடர்ந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. காவிரியை தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு மொத்தம் ரூ.11,250 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதியை மத்திய அரசிடமிருந்து மானியமாகவும், இன்னொரு பகுதியை தமிழக அரசின் பங்களிப்பாகவும் கொண்டு தவிர மீதமுள்ள தொகையை பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு, பன்னாட்டு நிறுவனங்களின் நிதிக்காக காத்திருக்காமல் தமிழக அரசு அதன் சொந்த நிதியில் காவிரியை தூய்மைப்படுத்தும் பணிகளைத் தொடங்க வேண்டும்.

# அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ள லாக்டவுன் படத்தின் டீசர் வெளியாகிறது




நடிகை அனுபமா பரமேஸ்வரன் தற்போது 'லாக் டவுன்' திரைப்படத்தில்நடித்துள்ளார்.லைகாநிறுவனம்சார்பில்சுபாஸ்கரன் தயாரித்துள்ளஇந்தபடத்தைஇயக்குனர்ஏ.ஆர்ஜீவாஇயக்கியுள்ளார். என்ஆர் ரகுநந்தன் மற்றும் சித்தார்த் விபின் இந்த படத்துக்கு இசையமைத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த படத்தின் டீசர் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'லாக்டவுன்' படத்தின் டீசர் நாளை காலை 11 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. 'லாக் டவுன்' திரைப்படம் இந்த மாதம் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகை அனுபமா பரமேஸ்வரன் தற்போது மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிக்கும் 'பைசன்' படத்தில் நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து பிரவீன் கந்த்ரேகுலா இயக்கத்தில் 'பரதா' என்ற படத்தில் நடிக்கிறார்.

# உமாபதி ராமையா நடித்துள்ள 'பித்தல மாத்தி' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



பிரபலநடிகர்தம்பிராமையாவின்மகன்உமாபதிராமையா'அதாகப்பட்டது மகாஜனங்களே', 'மணியார் குடும்பம்' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். மேலும் 'ராஜகிளி' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். இந்த நிலையில் உமாபதி ராமையா தற்போது 'பித்தல மாத்தி' எனும் திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில்தம்பிராமையா, பாலசரவணன், தேவதர்ஷினி, ஆடுகளம் நரேன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

மாணிக்க வித்யா இயக்கியுள்ள இந்த படத்துக்கு மோசே இசையமைத்துள்ளார். எஸ்.என்.வெங்கட் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்த படத்தை ஸ்ரீ சரவணா பிலிம் ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, 'பித்தல மாத்தி' திரைப்படம் வருகிற 14ந்தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

# மிருணாள் தாகூரின் வேடிக்கையான ஜிம் வீடியோ வைரல்



இந்தி மற்றும் தெலுங்கு படங்களில் நடித்ததன்மூலம் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் நடிகை மிருணாள் தாகூர். சீதா ராமம், ஹாய் நானா, பேமிலி ஸ்டார், லஸ்ட் ஸ்டோரீஸ் போன்ற படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள்மத்தியில்மிகவும்பிரபலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

உடற்பயிற்சியில் மிகவும் அக்கறைகொண்டவர் மிருணாள் தாகூர். தனது இன்ஸ்டாகிராம்

பக்கத்தில் மிகவும் ஆக்ட்டிவாக இருக்கும் இவர் அடிக்கடி தனது உடற்பயிற்சி வீடியோ மற்றும் புகைப்படங்களை பகிர்ந்து வருகிறார்.

அந்த வகையில் தற்போது அவர் பகிர்ந்துள்ள வீடியோ இணையத்தில் வைரலாகிவருகிறது.அந்தவீடியோவில், அவரது ஜிம் பயிற்சியாளர் எவ்வாறு கண்டிப்பாக இருக்கிறார் என்பது தெரிகிறது. முன்னதாக இவர் பகிர்ந்த கிக் பாக்சிங் வீடியோ இணையத்தில் வைரலானது குறிப்பிடத்தக்கது.

# இந்த பாடலுக்கு நடனமாட இவருக்கு ஸ்டெப்பே தரவில்லையாம் எந்த பாடல் தெரியுமா?



பிரபல நடிகை ஷில்பா ஷெட்டி. இவர் பெரும்பாலும் இந்தி மொழி திரைப்படங்களிலையே நடிப்பவர். இந்தி மொழியை தவிர தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளிலும் நடித்துள்ளார். இவர் திரைப்படங்கள் மட்டுமில்லாமல், சில தொலைக்காட்சி விளம்பரங்களிலும் நடித்துள்ளார்.

பல படங்களில் தனது நடனத்தால் ரசிகர்களின் இதயத்தை கொள்ளைக்கொண்டவர் ஷில்பா ஷெட்டி. அப்படி இவர் ஆடிய யுபி பீகார் லூட்னே பாடல் ரசிகர்களின் இதயத்தில் தனி இடத்தை அவருக்கு கொடுத்தது.

இன்று நடிகை ஷில்பா ஷெட்டி தனது 49வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இவருக்கு திரைப்பிரபலங்கள், ரசிகர்கள் என பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், யுபி பீகார் லூட்னே பாடலில் தனக்கு நடன ஸ்டெப்கள் தராததை நடிகை ஷில்பா ஷெட்டி வெளிப்படுத்தினார். இவர் நடிப்பில் கடந்த வருடம் வெளிவந்த படம் சுகி. அப்போது அப்படத்தில் நடித்த சக நடிகையான குசா குபிலாவுடன் நடந்த உரையாடலின்போது இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து கூறுகையில்,

எனக்கு இப்பாடலில் நடன ஸ்டெப்கள் எதுவும் தரவில்லை. நானாகவே ஸ்டெப் போட்டு இப்பாடலுக்கு நடனமாடினேன். இப்படலுக்காக நான் உடுத்திய ஆடை சூட்டிங்கிற்கு 2 மணி நேரத்திற்கு முன்புதான் தயாரானது. இவ்வாறு கூறினார்.

# கீர்த்தி ஷெட்டியுடன் நடிக்க மறுப்பது ஏன்? விஜய் சேதுபதி விளக்கம்



விஜய் சேதுபதி தற்போது 'மகாராஜா' படத்தில் நடித்து வருகிறார். இது இவரின் 50 வது படமாகும். குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இப்படத்தை இயக்கி உள்ளார். இப்படத்தை சுதன் சுந்தரம் மற்றும் ஜெகதீஷ் பழனிச்சாமி இணைந்து தயாரிக்கின்றனர்.

அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல். தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தின்புரொமோசன்பணியின்போது பேசிய விஜய் சேதுபதி கீர்த்தி ஷெட்டியுடன் நடிக்க மறுப்பது ஏன்? என்ற கேள்விக்கு பதிலளித்தார். அப்போது அவர் பேசியதாவது.

"டிஎஸ்பி படத்தில் கீர்த்திக்கு ஜோடியாக நடிக்கும் வாய்ப்பை மறுத்துவிட்டேன். ஏனென்றால், உப்பெனா படத்தில் அவருக்கு அப்பாவாக நடித்தேன். நாங்கள் படப்பிடிப்பில் இருக்கும்போது என்னை அவருடைய உண்மையான தந்தையாக நினைக்கும்படி அவரிடம் கூறினேன். அவர் என் மகனை விட சற்று மூத்தவள். இதனால் நான் முடியாது என்று கூறினேன்." என்றார்.

பின்னர் அந்த கதாபாத்திரத்தில் அனுகிரீத்தி வாஸ் நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படம் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது.

# வங்காளதேசத்திற்கு எதிரான தோல்விக்கு இதுதான் காரணம் வனிந்து ஹசரங்கா



20 அணிகள் கலந்து கொண்டுள்ள டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற 15வது லீக் ஆட்டத்தில் இலங்கை வங்காளதேசம் அணிகள் ஆடின.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற வங்காளதேச அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் ஆடிய இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 124 ரன்கள் மட்டுமே எடுத்தது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக பதும் நிசாங்கா 47 ரன்கள் எடுத்தார்.


வங்காளதேசம் தரப்பில் ரிஷாத் ஹொசைன், முஸ்தாபிசுர் ரஹ்மான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதையடுத்து 125 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய வங்காளதேச அணி 19 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டை இழந்து 125 ரன்கள் எடுத்து 2 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

வங்காளதேசம் தரப்பில் அதிகபட்சமாக ஹ்ரிடோய் 40 ரன்கள் எடுத்தார். இலங்கை தரப்பில் அதிகபட்சமாக நுவான் துஷாரா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட பின்னர் இலங்கை கேப்டன் வனிந்து ஹசரங்கா அளித்த பேட்டியில் கூறியதாவது,

8 முதல் 10 ஓவர்கள் வரை எங்களுடைய பேட்ஸ்மேன்கள் மிகச் சிறப்பாக பேட்டிங் செய்தார்கள். அதன் பின்னர் இறுதிகட்ட ஓவர்களில் நாங்கள் மோசமாக பேட்டிங் செய்தோம். எங்களது பந்துவீச்சுதான் எங்களின் பலம் என்று எல்லோருக்கும் தெரியும். நாங்கள் பேட்டிங்கில் 150 முதல் 160 ரன்கள் எடுத்தால் எங்களது பந்துவீச்சை வைத்து எளிதாக வெற்றி பெற்றிருக்க முடியும்.

நாங்கள் இரண்டு போட்டிகளாக தொடர்ந்து தோல்வி அடைந்திருக்கிறோம். எங்கள் பிளேயிங் லெவனில் முக்கிய நான்கு பவுலர்களை மட்டும் வைத்திருக்கிறோம். முக்கிய நான்கு பவுலர்களும் அவர்களது வேலையை செய்கின்றனர். ஆனால் மீதமுள்ள நான்கு ஓவர்களை நாங்கள் ஆல்ரவுண்டரிடம் நான்கு ஓவர்கள் வாங்க வேண்டி இருந்தது. இதுவே தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்த தோல்வியை மறந்து விட்டு அடுத்த போட்டிக்கு நாங்கள் சீக்கிரம் தயாராக வேண்டும் கேன் வில்லியம்சன்



20 அணிகள் கலந்து கொண்டுள்ள டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற 14வது லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் நியூசிலாந்து அணிகள் ஆடின. இந்த ஆட்டம் வெஸ்ட் இண்டீசில் உள்ள கயானாவில் நடைபெற்றது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் குவித்தது.

ஆப்கானிஸ்தான் தரப்ப்பில் அதிகபட்சமாக குர்பாஸ் 80 ரன்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி, பவுல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதையடுத்து 160 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து 15.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 75 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 84 ரன் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது. ஆப்கானிஸ்தான் தரப்பில் ரஷித் கான், பசல்ஹக் பரூக்கி ஆகியோர் தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இந்நிலையில் இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட பின் நியூசிலாந்து கேப்டன் கேன் வில்லியம்சன் அளித்த பேட்டியில் கூறியதாவது, முதலில் ஆப்கானிஸ்தான் அணிக்கு என் வாழ்த்துக்கள். அவர்கள் எல்லா வகையிலும் எங்களை விட சிறப்பாக செயல்பட்டார்கள். இந்த விக்கெட்டில் நல்ல ஸ்கோரை பெறுவதற்கு விக்கெட்டை கையில் வைத்து சிறப்பாக விளையாடினார்கள். நாங்கள் இந்த தோல்வியை மறந்து விட்டு அடுத்த போட்டிக்கு சீக்கிரத்தில் தயாராக வேண்டும். இந்தப் போட்டிக்காக எங்கள் வீரர்கள் கடினமாக உழைத்தனர். நாங்கள் இந்த இலக்கைத் துரத்தும் பொழுது எங்களுக்கு நல்ல பாட்னர்ஷிப் தேவைப்பட்டது. ஆனால் எங்களுக்கு அது கிடைக்கவில்லை. மேலும் பந்துவீச்சில் முதல் 10 ஓவர்களில் நாங்கள் பீல்டிங்கில் கோட்டை விட்டோம். நாங்கள் இதைவிட சிறந்தவர்கள் என்பது எங்களுக்கு தெரியும். நாங்கள் இதை விட்டு விலகிச் சென்று அடுத்த போட்டிக்கு தயாராக வேண்டும். அதே சமயத்தில் நல்ல ஸ்கோர் கிடைத்ததும் ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர்கள் அதைப் பயன்படுத்தி மிகச்சிறப்பாக செயல்பட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: சென்னையின் எப்.சி. அணியில் லால்டின்புயா



இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடரில் பங்கேற்று வரும் 2 முறை சாம்பியனான சென்னையின் எப்.சி. அணியில் மிசோரத்தை சேர்ந்த லால்டின்புயா 3 ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பின்கள வீரரான 27 வயது லால்டின்புயா 202425ம் ஆண்டு சீசனுக்காக சென்னையின் எப்.சி.யில் இணையும் 3வது வீரர் ஆவார்.முன்னதாகஅவர்2022ம்ஆண்டில்இருந்துஜாம்ஷெட்பூர் அணிக்காக விளையாடி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்; ஸ்வெரேவ் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



முன்னணி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ள பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிப் போட்டியில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் , நார்வே வீரர் காஸ்பர் ரூட் ஆகியோர் மோதினர். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி ஸ்வெரேவ் ஆதிக்கம் செலுத்தினார். இதனால் 26,62,64,62 என்ற செட் கணக்கில் ஸ்வெரேவ் வெற்றி பெற்றார். இதனால் அவர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில் கார்லஸ் அல்காரஸ் , ஸ்வெரேவ் ஆகியோர் மோத உள்ளனர்.

# நார்வே செஸ் போட்டி; சாம்பியன் பட்டம் வென்றார் மேக்னஸ் கார்ல்சென்



12வது நார்வே செஸ் போட்டி அங்குள்ள ஸ்டாவன்ஞர் நகரில் நடைப்பெற்றது. இதில் 6 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். ஒவ்வொருவரும் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். மொத்தம் 10 சுற்று முடிவில் முதலிடம் பிடிக்கும் வீரர், வீராங்கனை பட்டத்தை வெல்வர்.

இந்நிலையில் இந்த தொடரின் ஆண்கள் பிரிவின் கடைசி சுற்றில் முன்னணி வீரரான நார்வேயை சேர்ந்த மேக்னஸ் கார்ல்சென் அமெரிக்காவின் பேபியானோ கரோனாவிற்கு எதிராக மோதினார். இந்த போட்டி கிளாசிக்கல் கேமில் டிரா ஆகி ஆர்கமெடானுக்கு சென்றது. இதில் அபாரமாக செயல்பட்ட கார்ல்சென் பேபியானோ கரோனாவை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் இவரது ஒட்டுமொத்த புள்ளி எண்ணிக்கை 17.5 ஆக உயர்ந்தது. இதன் மூலம் நார்வே செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை கார்ல்சென் 6வது முறையாக கைப்பற்றினார். நகமுரா 15.5 புள்ளிகளுடன் 2வது இடமும், இந்தியாவின் பிரக்ஞானந்தா 14.5 புள்ளிகளுடன் 3வது இடமும் பிடித்தனர்.

மகளிர் பிரிவில் சீனாவின் ஜு வென்ஜுன் 19 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் பெற்றார். மகளிர் பிரிவில் இந்தியாவின் வைஷாலி 12.5 புள்ளிகளுடன் 4வது இடமும், கொனேரு ஹம்பி 10 புள்ளிகளுடன் 5வது இடமும் பிடித்தார்கள்.



**படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்**

**விளக்கம்:**

அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர், நிலையில்லாத சிறிய இன்பத்தைவிரும்பிஅறம்அல்லாதவற்றைச் செய்யார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.